# 'ஹீமோஃபீலியா' இருதய நோயாளிக்கு அரிய சிகிச்சை மூலம் மறுவாழ்வு

**சென்னை, ஏப். 10:** 'ஹீமோஃபீலியா' (ரத்தம் உறைதல் பாதிப்பு) குறைபாடுள்ள கேரளத்தைச் சேர்ந்த பினுவுக்கு (38) அரிய இருதய அறுவைச் சிகிச்சை மூலம் சென்னை மியாட் மருத்துவமனை மருத்துவர்கள் மறுவாழ்வு அளித்தனர்.

இதுதொடர்பாக மியாட் மருத்துவமனையின் இருதய அறுவைச் சிகிச்சைப் பிரிவின் தலைவர் டாக்டர் வி.வி.பாஷி, மருத்துவமனையின் தலைவர் மல்லிகா மோகன்தாஸ் ஆகியோர் செய்தியாளர்களிடம் கூறியதாவது:

கேரளத்தைச் சேர்ந்த பினு ஹீமோஃபீலியாவால் பாதிக்கப்பட்டவர். இத்தகைய பாதிப்பு உள்ளோருக்கு சிறிய அறுவைச் சிகிச்சை செய்தால்கூட தொடர் ரத்த இழப்பு ஏற்பட்டு உயிருக்கே ஆபத்து ஏற்படும். பினுவுக்கு இருதய மகாதமனியில் வீக்கம் ('அன்யூரிஸம்'), மகாதமனி வால்வில் ('அயோட்டிக் வால்வு') பிரச்னைகள் இருந்தன.

'ஹீமோஃபீலியா' பாதிப்புடன் இத்தகைய இருதயக் கோளாறுகளைச் சரி செய்வது என்பது மிகவும் கடினம் என்பதால், பல மருத்துவர்கள் அவருக்கு சிகிச்சை செய்ய முன்வரவில்லை. இந்த நிலையில் சென்னை மியாட் மருத்துவமனையில் பினு அனுமதிக்கப்பட்டார்.

**ஒன்றரை மாதம் திட்டம்:** பினுவுக்கு உள்ள இருதயப் பிரச்னையை அறுவைச் சிகிச்சை மூலம் சரி செய்ய இருதய மருத்துவம்- இருதய அறுவைச் சிகிச்சை- ரத்தம் ஏற்றுதல் துறை- நோய்க்குறியியல் துறை எனப் பல்வேறு துறைகளைச் நிபுணர்களுடன் தொடர்ந்து ஒன்றரை மாதம் திட்டமிடப்பட்டது.

கடந்த மார்ச் 21-ஆம் தேதி எனது (டாக்டர் வி.வி.பாஷி) தலைமையில் 20 மருத்துவர்கள் அடங்கிய குழு பினுவுக்கு தொடர்ந்து 7 மணி நேரம் வெற்றிகரமாக இருதய அறுவை சிகிச்சையைச் செய்தது.

இருதயத்தில் இருந்து செல்லும் வீக்கம் அடைந்த மகாதமனி பகுதி வெட்டி எடுக்கப்பட்டு,

பழுதாகியிருந்த மகாதமனி வால்வு சரி செய்யப்பட்டது. நான்கு யூனிட்டுகள் ரத்தம்,

ரத்த ஓட்டத்தைச் சீரமைக்கும் மருந்துகளும் பயன்படுத்தப்பட்டன. அறுவைச் சிகிச்சைக்குப் பிறகு இப்போது பினு நலமாக உள்ளார் என்று அவர்கள் தெரிவித்தனர்.



இருதய அறுவைச் சிகிச்சை மூலம் மறுவாழ்வு பெற்ற பினுவுடன் (நடுவில்) சென்னை மியாட் மருத்துவமனையின் தலைவர் மல்லிகா மோகன்தாஸ், இருதய அறுவைச் சிகிச்சை துறைத் தலைவர் டாக்டர் வி.வி.பாஷி.